# 4

# அல்லாஹ்வின் படைப்புக்கள்

பிள்ளைகளே! மனிதன் உட்பட ஏனைய படைப்புக்கள் அனைத்தையும் அல்லாஹ் தான் படைத்தான் எனப் பார்த்தோம் அல்லவா!

அல்லாஹ்வின் படைப்புக்களில் உயிர் உள்ளவைகளும் உள்ளன. உயிரற்றவைகளும் உள்ளன. அவற்றுள் மனிதர்கள், மிருகங்கள், பறவைகள், பூச்சிகள், தாவரங்கள், மீன்கள் போன்றன உயிர் உள்ளவை. இவற்றுள் தாவரங்களுக்கு நடமாட முடியாது. கிருமிகள், நுண்ணங்கிகள் மற்றும் பக்றீரியாக்கள் போன்றன எமது வெற்றுக் கண்களுக்குப் புலப்படாது இயங்கும் மிகச் சிறிய உயிரினங்கள் ஆகும்.

மண், நீர், நெருப்பு, மலைகள், மற்றும் ஆறுகள் போன்றன உயிர் இல்லாத சடப்பொருட்கள் ஆகும். காற்று, மின்சாரம், வெப்பம், காந்தம் போன்ற அல்லாஹ்வின் படைப்புக்களான சக்திகளுக்கும் உயிர் கிடையாது.

நாம் வாழும் உலகுக்கு அப்பால் உள்ள அல்லாஹ்வின் சில படைப்புக்களாக சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள், கோள்கள் போன்றன காணப்படுகின்றன. பிரபஞ்சத் தில் காணப்படும் பிரமாண்டமான இறைவனது படைப்புக்களான இவை இயங்கிக் கொண்டுதான் அருக்கின்றன. இருப்பினும் இவைகளுக்கும் உயிர் கிடையாது.



உலகில் காணப்படும் உயிருள்ள, உயிரற்ற படைப்புக்கள், பிரபஞ்சத்தில் காணப்படும் பிரமாண்டமான ஏனைய படைப்புக்கள் அனைத்தும் அற்புதமானவையாகும். அவை திட்டமிட்ட அடிப்படையில் படைக்கப் பட்டுள்ளன. ஓர் ஒழுங்கில் அவை இயங்குகின்றன. இதன் மூலம் அறிவும் சக்தியும் மிக்க அல்லாஹ் தான், அவற்றைப் படைத்துள்ளான் என்பது தெளிவாகின்றது அல்லவா!

பிள்ளைகளே! நமது புலன்களுக்கு அப்பாற்பட்ட இன்னொரு உலகமும் உண்டு. அவ்வுலகிலும் இறை படைப்புக்கள் உண்டு. அவர்களில் மலக்குகள் முக்கியமானவர்கள். அல்லாஹ்வை நம்பும் முஃமின்கள் அவனது மலக்கு களையும் விசுவாசிக்க வேண்டும்.

இது பற்றி அல்குர்ஆன் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றது.

'(விசுவாசிகள்) யாவரும் அல்லாஹ்வையும் அவனுடைய மலக்கு களையும் அவனுடைய வேதங்களையும், அவனது தூதர் களையும் விசுவாசி க்கின்றனர்' *(2:285)*

அல்லாஹ், முதல் மனிதன் ஆதம் (அலை) அவர்களை மண்ணால் படைத்தான். ஆனால் மலக்குகளை ஒளியால் படைத்தான். மலக்குகள் ஆண்களுமல்லர்; பெண்களுமல்லர். அவர்களுக்குப் பெற்றோர்களோ பிள்ளைகளோ இல்லை. மனிதனைப் போன்று அவர்களுக்குப் பசி, தாகம், ஆசை, களைப்பு, தூக்கம், முதிர்ச்சி, தளர்ச்சி போன்றன ஏற்பட மாட்டாது. அவர்களுக்குத் தெய்வீகத் தன்மையும் கிடையாது, அல்லாஹ்வினால் ஏவப்பட்டதை அவர்கள் செய்து முடிப்பார்கள்.

மலக்குகள் எண்ணில் அடங்காதவர்கள். அவர்களின் எண்ணிக்கையை அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறியமாட்டார்கள். இருப்பினும் அவர் களில் பத்துப்பேர் முக்கியமானவர்கள். மலக்குகளில் ஜிப்ரீல் (அலை) மிக முக்கியமானவர். அவர் தான் அல்லாஹ்விடம் இருந்து வஹீயை நபிமார்களுக்குக் கொண்டு வந்தவர். இவருக்கு 'அர்-ரூஹ்', 'நாமுஸுல் அஃழம்' மற்றும் 'ரூஹுல் குத்ஸ்' என்னும் சிறப்புப் பெயர்களும் உண்டு.

இவரைத் தவிர, 'மீக்காயீல்' (அலை) காற்று, நீர், நெருப்பு போன்றவற்றிற்குப் பொறுப்பாயிருக்கிறார்கள். 'இஸ்ராபீல்' (அலை) கியாமம் நெருங்கும் பொழுது ஸுர் ஊதுவார்கள், 'மலகுல் மவ்த்' (அலை) உயிர் வாங்குவார்கள். 'ரகீப் - அதீத்' (அலை) இருவரும் மனிதன் செய்யும் நன்மை

தீமைகளைப் பதிவு செய்கிறவர்கள். 'முன்கர் (அலை)- நகீர் (அலை)' இருவரும் கப்ரில் விசாரணை செய்வார்கள். 'ரிழ்வான் ' (அலை) சுவர்க்கத்தின் அதிபதியும் 'மாலிக்' (அலை) நரகத்தின் அதிபதியும் ஆவார்கள்.

புலனறிவுக்கு அப்பாற்பட்ட அல்லாஹ்வின் படைப்புகளுள் இன்னொரு பகுதியினரும் உள்ளனர். அவர்களே 'ஜின்கள்' ஆவர். இவர்கள் நெருப்பினால் படைக்கப்பட்டுள்ளனர். மனிதர்களைப்போன்று இவர்களுக்குப் பசி, தாகம், உறக்கம், ஆசை, குடும்பம் போன்றன காணப்படும். ஜின்களும் மனிதர்களைப் போன்றே அல்லாஹ்வை வணங்கி வழிபடுமாறு ஏவப்பட்டுள்ளனர்.

ஜின்களுக்கு மத்தியில், இறைக்கட்டளைகளுக்கு மாறு செய்யும் பிரிவினர் 'ஷைத்தான்கள்' என அழைக்கப்படுகின்றனர். குழப்பம் விளைவிக்கும் ஷைத்தான்களின் தலைவனே 'இப்லீஸ்' ஆவான்.

பிள்ளைகளே! அல்லாஹ்வின் படைப்புக்கள் இவ்வாறாக அற்புதமாகவும் ஆச்சரியமாகவும் உள்ளன. இதன் மூலம் அனைத்தினதும் படைப்பாளன் வல்ல அல்லாஹ் என நம்புவோம்.

**பயிற்சி**

1. அல்லாஹ்வின் பிரமாண்டமான இரு படைப்புகளைக் குறிப்பிடுக.
2. ஆதம் (அலை) அவர்கள் எதனால் படைக்கப்பட்டார்கள்?
3. ஜிப்ரீல் (அலை) அவர்களின் இரு சிறப்புப் பெயர்களைக் குறிப்பிடுக.
4. மனிதர்களுக்கும் மலக்குகளுக்கும் இடையிலான வேறுபாடுகளை அட்டவணைப்படுத்துக.
5. இறை படைப்புகளின் அற்புதங்களைக் காணும்போது உமது உள்ளத்தில் தோன்றிய எண்ணங்களைப் பட்டியற்படுத்துக.
6. ஜின்கள் பற்றி நீர் அறிந்தவற்றை சுருக்கமாக எழுதுக.
7. பிரதான மலக்குகளின் பெயர்களைத் தருக.